


**22. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக** ஆய்வகத்திற்கு சட்டீஸ்கட் ராய்பூரில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று அடிக்கல் நாட்டினார்.

2. **மதுரையில் இன்றுமாலை நடைபெறும் முருக பக்தர்கள்** மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

3. **சாலை பாதுகாப்பு பணிகள் தமிழகத்தில் சிறப்பாக** செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. **மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக மாநிலம் முழுவதும் 10** ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று மாநில அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

5. **இலங்கையில் இன்று தொடங்கும் ஸ்னூக்கர் சாம்பியன்பட்ட** போட்டிகளில் இந்திய அணி களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக வளாகம்** மற்றும் ஆய்வகத்திற்கு சட்டீஸ்கட் ராய்பூரில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று அடிக்கல் நாட்டினார்.

400 கோடி ரூபாய் செலவில் 40 ஏக்கர் பரப்பளவில் இவ்வாளாகம் அமையவுள்ளது.

சட்டீஸ்கர் மற்றும் அதனை சுற்றியுள்ள அண்டை மாநில காவல்துறை உயரதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் அவர்,

நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்கிறார்.

2 நாள் பயணமாக அங்கு சென்றுள்ள அமைச்சர், நாளை நாராயன்பூர் மாவட்டத்தில் எல்லை பாதுகாப்பு படை வீரர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**முருகன் மாநாடு**

**மதுரையில் இன்று நடைபெறும் முருக பக்தர்கள்** மாநாட்டில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், ஆளுநர். திரு.ஆர்.என். ரவி, தமிழக பி.ஜே.பி. தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக கந்தசஷ்டி கவசப்படாலை லட்சக்கணக்கானோர் ஒன்றிணைந்து பாடி கின்னஸ் சாதனை படைக்கவுள்ளதாக டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

முருகன பக்தர்களை ஒன்றிணைக்கும வகையில் நடைபெறவுள்ள பங்கேற்பதற்காக உலகம் முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கானோர் மதுரை வரத்தொடங்கியுள்ளனர்.

மாநாட்டிற்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

பாதுகாப்பு பணியில் ஆயிரத்து 500 காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டு நிகழ்வை மாலை 5 மணிமுதல் ஐந்தரை மணிவரை மதுரை வானொலி நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

திருச்சி, சென்னை பண்பலைகளிலும் இந்நிகழ்ச்சி அஞ்சல் செய்யப்படும்.

❖❖❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**மத்திய இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை** அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா ஒலிம்பிக் தின ஓட்டத்தை புதுதில்லியில் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தொடர்ந்து உடற்பயிற்சி மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் ஞாயிற்றுக்கிழமை சைக்கிள் பிரச்சாரத்தையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**சஞ்சய்சேத்**

**மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு.** சஞ்சய்சேத் நாளை தொடங்கி வரும் வியாழக்கிழமை வரை கென்யா மற்றும் மடகாஸ்கர் நாடுகளுக்கு அரசுமுறை பயணம் செல்கிறார்.

முதல்கட்டமாக **கென்யா தைட்டா, ட்வேட்டா கவுண்டியில்** போர் நினைவுத்தூணை திறந்துவைக்கும் அவர், வரும் வியாழக்கிழமை மடகாஸ்கரின் 65-ம் ஆண்டு சுதந்திரதின விழாவில் பங்கேற்கவுள்ளார்.

இப்பயணத்தின் போது இருநாடுகளுக்கு இடையே வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகளில் ஒருங்கிணைந்து செயலாற்றுவது குறித்து அந்நாட்டு உயர்மட்ட அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**தேசிய புலனாய்வு**

**பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில்** ஈடுபட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக கூறி 2 பேரை தேசிய புலனாய்வு அமைப்பு இன்று கைது செய்துள்ளது.

பட்கோட், பஹல்காம், ஹில்பார்க் பகுதிகளை சேர்ந்த இருவரும், பாகிஸ்தானை சேர்ந்த தடைசெய்யப்பட்ட **லஷ்கர் - இ - தொய்பா** அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**டொனால்ட் ட்ரம்ப்**

**ஈரானில் உள்ள ஃபோர்டோ, நடான்ஸ்,** இஸ்ஃபஹான் ஆகிய 3 அணுசக்தி நிலையங்களில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மக்களிடையே இன்று உரையாற்றி அவர், ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் திறனை நிறுத்தும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளார்.

இதனிடையே சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் அமெரிக்கா இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

நாட்டின் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் அணுசக்தி துறையில் முன்னெடுத்துச்செல்வதற்கும் இத்தாக்குதலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்று கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**மத்திய அரசின் 11 ஆண்டுகாலம் சிறப்பு செய்தித்தொகுப்பு**

...

மத்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களால் நாட்டில் நிறுவப்பட்ட மின்திறன் 476 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.

கடந்த 2013-2014 4.2 சதவீதமாக இருந்த மின்பற்றாக்குறை தற்போது 0.1 சதவீதமாக குறைந்துள்ளது.

கடந்த ஏப்ரல் 2018ஆம் ஆண்டிற்குள் இந்தியா 100 சதவிகித கிராம மின்மயமாக்கலை எட்டியது.

தனிநபர் மின்சார நுகர்வு 45.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது.

சூரிய மின்சக்தி உற்பத்தி 39 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு 2.82 ஜிகா வாட்டாக இருந்த சூரிய மின்சக்தி உற்பத்தி தற்போது 110.9 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளது.

சர்வதேச அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவப்பட்ட திறனில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.

சர்வதேச அளவில் காற்றாலை மின்சார உற்பத்தியில் இந்தியா 4ஆவது இடத்தை வகிக்கிறது.

நாட்டில் தரைமட்டத்திலிருந்து 150 மீட்டர் உயரத்தில் உள்ள காற்றாலை திறன் ஆயிரத்து 164 ஜிகா வாட்டாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு எரிசக்தி தேவை முக்கியம் என்பதால் வரும் 2035ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் எரிசக்தி நுகர்வு இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகரித்து வரும் மின்சார தேவை மற்றும் நிலைதன்மையை ஊக்குவித்தல் ஆகிய இரண்டு இலக்குகளை நம்நாடு வெற்றிகரமாக சமநிலை படுத்திவருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**சாலை திட்டங்கள்**

**சாலை திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக** செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் 17 ஆயிரத்து 154 கோடி ரூபாய் செலவில், 9 ஆயிரத்து 620 கிலோமீட்டர் நீள சாலைப்பணிகள் உட்பட ஏராளமான சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி ஆயிரத்து 372 கோடி ரூபாய் மதிப்பில், ஆயிரத்து 49 உயர்மட்ட பாலங்கள் தரைபாலங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பங்களுடன் சாலை மற்றும் பாலப்பணிகள் சிறப்பாக நடைபெற பொறியாளர்கள், துறைசார்ந்த அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப் பட்டதாகவும்,

திருச்சி, திண்டுக்கல், நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை உள்ளிட்ட பகுதிகளில் பள்ளி கல்லூரி மாணாக்கரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை, மன்னார்குடி, பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**கீதாஜீவன்**

**தமிழகத்தில் மகளிர் உரிமைத் தொகை** திட்டத்திற்காக அடுத்த மாதம் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் அக்டோபர் மாதத்திற்குள் பரிசீலனை செய்து முடிக்கப்படும் என்று மாநில சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர் பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமை இன்று தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதற்கென மாநிலம் முழுவதும் 10 ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும், முகாம்கள் நடைபெறும் இடங்கள் குறித்து அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவிப்பார்கள் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில்** குற்றச்சம்பவங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இன்று நடைபெற்றது.

காங்கேயம், வெள்ளக்கோவில், ஊத்துக்குளி, ஊதியூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பெற்றோர் தங்களது குழந்தைகளை கண்காணிப்புடன் வளர்ப்பது, மனித உரிமைகள் உள்ளிட்டவைகள் குறித்த எடுத்துரைக்கப்பட்டது.

**அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டத்தில்** உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் வரும் புதன்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மீனவர்களுக்கான** சிறப்பு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெற விரும்புவோர் அடுத்தமாதம் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி, சிவகங்கை மாவட்டங்களில்** நாட்டுக்கோழி வளர்க்க விரும்புவோர் 50 சதவிகித மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

**ஈரோடு மாவட்டம் சிவகிரியில் இதய நோய்கள்** குறித்து இன்று நடைபெற்ற மாரத்தான் விழிப்புணர்வு போட்டியில் 3 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

**மயிலாடுதுறை வாய்ஸ்**

மேட்டூரிலிருந்து கடந்த 12-ம் தேதி திறக்கப்பட்ட காவிரி நீர், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே மேலையூர் காவிரி ஆற்றின் கடைசி கதவணையை வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**திண்டுக்கல் வாய்ஸ்**

**திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேரிஜம் ஏரி** பகுதியில் யானைகள் நடமாட்டம் காணப்படுவதால் இன்றுமுதல் 3 நாட்களுக்கு சுற்றுலா பயணிகள் ஏரிக்கு செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**திருத்தணி சுப்ரமணிய திருக்கோவிலில் மாத** கிருத்திகையை ஒட்டி சுவாமிக்கு இளநீர், பால், சந்தனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

அடிவாரத்திலிருந்து மலைக்கோவிலுக்கு செல்ல வசதியாக பேருந்து வசதிகள் செய்துதரப்பட வேண்டுமென பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெல்லை, நெல்லையப்பர் காந்திமதி அம்பாள்** திருக்கோவில் தேர் திருவிழா வரும் 30-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கவுள்ள நிலையில் திருத்தேர் சுத்தம் செய்யும் பணிகள் இன்று நடைபெற்றதாக எமது செயதியாளார் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**ஸ்னூக்கர்**

**கொலும்புவில் இன்று தொடங்கும் ஸ்னூக்கர்** சாம்பியன்பட்ட போட்டிகளில் இந்திய அணி களமிறங்குகிறது.

கமல் சாவ்லா, பங்கஜ் அத்வானி ஆகியோர் தலைமையில் இந்திய குழுவினர் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இன்று நடைபெறும் போட்டியில் இந்தியாவின் **Ishpreet Chadha -** சீனாவின் **Yao Pengcheng** –ஐ எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**லீட்ஸில், இந்தியாவிற்கு எதிரான முதல் டெஸ்ட்** கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில், 3 விக்கெட் இழப்பிற்கு 209 ரன் எடுத்திருந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 471.

3-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖